சிவமயம்



# 31ம் நாள் நினைவு மலர்

17.09.2006

## அமரர். சீனித்தம்பி தம்பிராசா

(பிரசித்த [illegible] பிரபல சோதிடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# சீனித்தம்பி தம்பிராசா

(பிரசித்த நொத்தாரிசும், பிரபல சோதிடரும்)
ஆரையம்பதி.



## திதி நிர்ணய வெண்பா

*வையகம் போற்றும் விய வருடம் ஆவணித்திங்கள்*
*அபர பக்க தசமித்திதியும் கூடிய ரோகிணி நன்னாளில்*
*பிரமனின் சிருஷ்டியால் மருங்குல் பெற்ற*
*மாண்புடை சீலன் தம்பிராசா பேரின்பப் பெருவாழ்வினனான்*

தோற்றம்
**26-10-1916**



மறைவு
**18-08-2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தோத்திரப் பாமாலை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைத்தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே.
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்களுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப் புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா •
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

## காயத்ரீ மந்திரம்

கஷ்ட ஹத்த துவிதேகாய
பக்தே ஷ்ட ஜயதாயினே
விநாயகாய விபவே
சிறி கணேசாய மங்களம் !

**"வாகனம் செலுத்தும் போது 16 தடவை உச்சரிக்கவும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



## திருவாசகச் சிறப்பு

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம் என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன் கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நனியானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற்போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈத்து என்னை ஆட்கொண்ட எந்தைபெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண்ணுனர்வே
போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றி ன்பவெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலகுரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லப் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

***திருச்சிற்றம்பலம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சீனித்தம்பி தம்பிராசா
# வாழ்க்கை குறிப்பு

ஆயக்கலை 64க்கும் உரித்தான பாடுமீன் வாவி தினமும் முத்தமிட்டு வாழ்த்துக் கூறும், ஆரைச்செடியின் அழகினிலே, செங்காந்தல் மலர் பூத்து மணம் காட்டிய கற்றவரும், வித்தகரும், கூத்தும், கும்மியும், மந்திரமும், வைத்தியமும், பூத்துக் குலுங்கிய புண்ணிய பூமியாம் ஆரையம்பதியிலே 26.10.1916ம் ஆண்டு மலர்ந்து 18.08.2006 ம் ஆண்டு உதிர்வு பெற்றார். 05ம் வகுப்பு வரை இவரது ஆரம்பக் கல்வி ஆரையம்பதி ஆர்.கே.எம். (இராமகிருஷ்ண மிஷன்) பாடசாலையில் ஆரம்பமாகி, முஸ்லிம் சகோதரர்கள் நிறைந்து வாழும் காத்தான்குடி 05ம் குறிச்சி அரசினர் பாடசாலையில் (எஸ்.எஸ்.சி) வரை உயர்வு பெற்று ஓங்கியது. இவரது படிப்பு ஓரளவு முடிந்த தருணத்தில் ஆரையம்பதி கிராமச் சபையில் (வி.சி), அன்றைய தலைவராக அப்பொழுது கடமையாற்றிய அமரர் த.சி. என்றழைக்கப்பட்ட த. சிவசுப்ரமணியம் அவர்களது இலிகிதராக கடமையாற்றிய பின்பு அவர் மறைந்து அவரது மகன் அமரர். த.சி. பூபாலரெத்தினம் பதவி ஏற்றதும் அவர்களுக்கும் இலிகிதராக கடமை புரிந்து சிறப்புப் பெற்றார்.

பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து தமிழ் இலக்கணம், இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை பெற்ற இவர், மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல நொத்தாரிஸ் கே.வி.எம்.இராசையா அவர்களின் சீடனாக திகழ்ந்து, வேலை பழகி பின்பு நொத்தாரிஸ் பரீட்சையில் சிறப்பு சித்தியடைந்து ஒரு வருடம் கந்தையா நொத்தாரிஸ் அவர்களிடம் சகலதையும் பூரணமாக அறிந்து கொண்டு பின்பு 1958ம் ஆண்டிலிருந்து நொத்தாரிசாக நீதி சத்தியபிரமாணம் செய்து தனிமையாக கடமையை தொடங்கினார். அத்தோடு குருமண்வெளியில் பிரபல சாத்திரியாக விளங்கிய திரு.முத்ததம்பி அவர்களிடம் சோதிட கலையை பூரணமாக கற்றுத் தேறினார். 1940ம் ஆண்டிலிருந்து சோதிடம் பார்த்தலை மக்களுக்கு ஒரு சேவையாக செய்து கொண்டு வந்தார். கெடுதி, நினைத்த காரியம், வெற்றிலை வைத்துப் பார்த்தல், ஜாதகக் குறிப்பு எழுதுதல், எண் சோதிடம், வாஸ்து சாஸ்திரம் போன்ற பலமுறைகளில் சோதிடத்தைக் கணித்துக் கூறினார். இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட சோதிடம் பார்க்க வந்தவர்களுக்கு சோதிடம் கூறினார். தனது நொத்தாரிஸ் கடமையில் ஒரு பிழையும் இன்றி உண்மைக்கும், நேர்மைக்கும் எடுத்துக் காட்டாக சேவையாற்றியதோடு இந்து சமயத்தில் பற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் சைவ சமயத் தீட்சையும் பெற்று பூரண சமய சீலராக துலங்கினார். காலையில் தியானத்தில் ஈடுபடுவது, உடற்பயிற்சி அப்பியாசங்கள் செய்வது அவரது வழமையான கடமையாகும். எங்களது நெஞ்சில் நிறைந்த இந்தப் புனிதர் சுவாமி இராமகிருஷ்ண அடிகளாரின் போதனைகளைப் பின்பற்றி, விவேகானந்த அடிகளாரின் தத்துவங்களை நெஞ்சில் பதித்து செயல்பட்டவர்.

தனது வாழ்க்கையில் 8வது வயதில் தற்செயலாக ஏற்பட்ட அனர்த்தத்தால் தென்னை மரத்தில் இருந்து தலையில் தேங்காய் விழுந்த நிலையில் மயிர் இழையில் உயிர் தப்பிப் பிழைத்து, அதனால் ஏற்பட்ட தாக்கத்தினால் ஒரு கையும், காலும் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று தேறினார். இவர் உணவில் மாமிசத்தைத் தவிர்த்து மரக்கறி வகைகளையே மிகவும் விரும்பிச் சாப்பிட்டு வந்தார். சுகவீனங்கள் வந்தால் கூட ஆங்கில மருந்தைத் தவிர்த்து இயற்கை மூலிகை வகைகள், ஆயுள் வேத மருந்துகளையே விரும்பிப் பாவித்து சுகம் பெற்று வந்தார்.

இறுதிவரை பிரம்மச் சாரியாக வாழ்ந்து சகோதரிகளுக்கும், மருமக்கள்மார்களுக்கும், வழிகாட்டியாக, அவர்களது முன்னேற்றத்திற்கு, உயர்வுகளுக்கு கலங்கரை விளக்கமாக நின்று துலங்கி ஒளிகாட்டி, "**மக்கள் சேவையே மகேசன் சேவை**" என்ற புனித தத்துவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்து 90வது வயதில் இறையருளின் புனித வீட்டிற்கு விடைபெற்றுச் சென்றுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதியின் முன்னோடி நொத்தாரிஸ்
## அமரர். சீனித்தம்பி தம்பிராசா (அன்பு மணி)

ஆரையம்பதி கிராமத்தின் முன்னோடி நொத்தாரிசாகவும், சோதிடராகவும் நன்கு அறியப்பட்டவர். அமரர். சீனித்தம்பி தம்பிராசா. சுமார் 3 தலைமுறை வரை அவர் ஜாதகக் கணிப்பு செய்தவர் எனக் கூறலாம்.

நான் சிறுவனாக பள்ளி செல்லும் மாணவனாக உலவிய காலத்தில் தினமும் நான் அவரைத் தரிசிப்பேன் அவர் கடமைகள் முடித்து வீடு திரும்பும் போது கையில் குடையுடனும், வெள்ளை வெளிர் ஆடையுடனும், அவர் நடந்து செல்வது இப்போதும் என் மனதில் பசுமையாய் பதிந்துள்ளது.

ஆண்டவனின் ஒரு அற்புதமான படைப்பு அவர். ஒரு ஈ, எறும்புக்குக் கூட தீங்கு நினைக்காத மனிதர் எப்போதும் நல்லதையே எண்ணவும் நல்லதையே பேசவும் நல்லதையே செய்யவும், இறைவன் அவருக்கு திருவருள் பாலித்துள்ளான்.

அவருடைய பணிகள், நொத்தாரிசு, சோதிடம் என இருமுகப் பட்டதாக அமைந்தது. தனது கடமைகளுக்கு அப்பால், தன்னிடம் வருபவர்களிடம், மனிதாபிமான முறையில் உரையாடி ஆயிரக் கணக்கானோருக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறி அவர்களது வாழக்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் நண்பனாய், மந்திரியாய், நல்லாசானாய் அவர் செயல்பட்டார். அவரிடம் சோதிடம் கேட்பதற்காக ஆரையம்பதி மக்கள் மட்டு மல்லாது அயல் கிராமங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள். காலை 7.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை அவர் வீட்டில் வந்து காத்திருப்பவர்களை ஒவ்வொருவராக கவனித்து அனுப்பிய பின்பே அவர் மதியபோசனத்திற்குச் செல்வார். எப்போதும் நகைச் சுவையுடன், கலகலப்பாகப் பேசிப்பழகுவார்.

எல்லா ஊர்களிலும் சோதிடர்கள் இருந்தாலும் சுகவீனமானோர் ஜாதகம் கணிப்பதற்கும், குறி கேட்பதற்கும் இவரிடமே வருவார்கள். ஜாதகக் கணிப்பை துல்லியமாக செய்வார், குறி கேட்கும் போது நேரில் கண்டவர் போல் நடந்த சம்பவங்களை ஒவ்வொன்றாக கூறுவார். அதனால் அவர் சோதிடத்தில் முழு நம்பிக்கை வைத்து மக்கள் அவரிடம் வந்தனர். ஆத்ம திருப்தியுடன் சென்றனர்.

" தனக்கென வாழா பெருந்தகை" என்பது இவருக்கே பொருந்தும். தான் திருமணம் செய்து கொள்ளாமல் நைஷ்டிகப் பிரம்மச்சாரியாக வாழ்ந்து தன் குடும்பத்தவருக்கு வாழ்வமைத்துக் கொடுப்பதற்கே அவர் தன் வாழ் நாளைச் செலவிட்டார்.

நிறைகுடம் தளம்பாது என்பதற்கமைய இவர் தனது சுயமுயற்சியினால் "'பாலபண்டிதர்" பரீட்சையில் சித்தியெய்து தமிழ் இலக்கண, இலக்கியத்தில் புலமை பெற்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் வழியில் நின்று தியானப் பயிற்சியில் ஈடுபட்டும் சைவ சமய தீட்சை பெற்றும், தன்னைப் புனிதராக்கிக் கொண்டவர். 90வது வயது வரை வாழ்ந்து (26.10.1916 - 18.05.2006) மனித வாழ்வில் நிறைவு கண்டவர். அந்த வகையில் அவர் நம் அனைவருக்கும் ஆதர்ச புருஷனாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதப் பண்போடு பணியைத் திறம்பட ஆற்றி மதிப்பெய்தியவர்

மட்டக்களப்பு மாவட்ட பிரசித்த நொத்தாரிஸ் அமரர். சீனித்தம்பி தம்பிராசாவை 1969ம் வருடம் முதல் எனக்குத் தெரியும். 1979ம் ஆண்டில் காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்ட பதிவாளருமாக மட்டக்களப்பு அலுவலகத்தில் தலைமை பொறுப்பேற்கப்பட்ட காலத்திலிருந்து அவரிடம் மேலும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் நன்கு மதிக்கும் வகையில் தனது நொத்தாரிஸ் பணியைச் செய்து பாராட்டப்பட்டவர். பதவியால் பெருமை தேடிக் கொள்ளும் பலர் நம் மத்தியில் உள்ள இக்கால கட்டத்தில் பிரசித்த நொத்தாரிஸ் பதவி இவரது நற்பணியால் பெருமை பெற்று விளங்கியது என்றால் மிகையாகாது.

கடமையில் ஒரு சிறு தவறு கூட ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். திணைக்கள தேவைகளில் அசட்டை அல்லது பணியைச் செய்வதில் தவறு போன்ற காரணங்களுக்காக அவருக்கு எதிராக அலுவலக நடவடிக்கை எடுத்ததாக என் அறிவுக்கு எட்டியவரை தெரியவில்லை.

உறுதிகள் அதிகம் எழுதி உழைப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று போட்டா போட்டியுடன் கருமம் ஆற்றும் செயலுக்கு அவர் விதிவிலக்காக இருந்தவர். அவரது திறமைமிக்க சேவையை ஒட்டி மக்களே அவரை தேடிச் சென்று தங்கள் தேவையை நிறைவேற்றினார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். புதிதாக பிரசித்த நொத்தாரிசாக நியமனம் பெற்றவர்களுக்கு அமரர் ஊக்கமும், ஆக்கமும் அளித்து வேண்டிய ஒத்துழைப்பை நல்கி வந்தது அவரது நற்பண்புக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

பிரசித்த நொத்தாரிசாக மட்டும் தெரியவந்த அமரரை காலப்போக்கில் ஒரு சிறந்த பண்பாளராகவும் கண்டு கொண்டேன். எவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் கொண்டவர், தலைமைத்துவத்திற்கு நன்கு மதிப்பளித்து ஒத்துழைத்தவர். எவருடனும் கலகலப்பாக பேசி நட்புடன் பழகியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஒரு பிரபல சோதிடராகவும் திகழ்ந்தார். அண்மையில் ஒரு திருமணப் பொருத்த விஷயத்தில் ஒரு ஐயப்பாடு தொடர்பாக அவரைச் சந்தித்தப் போது சுகவீனமாக இருந்த போதிலும் நான் அங்கு வந்திருப்பதை அறிந்த உடனே இன்முகத்துடன் வரவேற்று உபசார வார்த்தைகளைப் பேசி குசலம் விசாரித்தார். ஐயப்பாடு தொடர்பாக விரிவான விளக்கத்தையும் நல்கினார்.

மகாபாரத கதையில் வரும் பிதாமகரான பீஷ்மர் வாழ்ந்து காட்டிய நெறியில் அவர் வாழ்ந்து உற்றார், உறவினர்களுக்கு தலைவராகவும், ஆலோசகராகவும், விளங்கினார்.

இவ்வுலகில் அவர் கிட்டத்தட்ட 90 ஆண்டுகள் மனித விழுமியத்தோடு வாழ்ந்த ஆசார சீலர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிறை கண்டு அமரராகி பெருமை பெற்றவர். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**சாமித்தம்பி முத்துக்குமாரன்**
(உதவிப் பதிவாளர் நாயகம் ஓய்வு பெற்றவர்)

**Retd Asst. Registrar General**

கல்லடி,
17.09.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நாமம் என்றும் வாழும் !

ஐயா ! தம்பிராசா ஐயா ! நேர்மையின் திருவுருவே !
சோதிட கலையின் முடி சூடா மன்னராய் திகழ்ந்தவரே !
ஓயாது படித்து உருப்படியாய் வாழ்ந்து
அருமைத் தங்கையின் மக்களுக்காய் ஒளிவிளக்காய் நின்று
அயராது பாடுபட்டு ஊனம் ஒரு குறையாக எண்ணாமல்
எழுச்சியாய் வாழ்ந்து எவருக்கும் எடுத்துக்காட்டாய் திகழ்ந்து
பெய்யும் மழையாக பெருந்தன்மை நொத்தாரிசாக வாழ்ந்து
பூமியில் பிறந்து சிறப்பாக வாழ்ந்தவர் நீங்கள் !

இத்தனை வயதிலும் உறுதியாக வாழ்ந்து
எவருக்கும் தீங்கு கனவிலும் நினையாமல்
பத்தரை மாற்றுத் தங்கமாய் வாழ்ந்தவரே !
பத்தியாய் பண்பாடாய் பவித்திரமாய் இலங்கி
உத்தமராய் ஏழை எளியோருக்கு உதவிகள் செய்து
அன்பின் திருமகனாய் ஆரையம்பதியில் நிறைவு கண்டவரே !
எத்தனை தடைகள் தாண்டி முன்னேற்றப் பாதையில் முழுமை பெற்று
அப்பனின் வீட்டிற்கு ஓய்வு பெறப் போனீரோ ?

வாழும் காலமெல்லாம் சோதிடம் வருவோருக்கு கூறி
வித்தகனாய் நின்றவரே! விளங்கு புகழ் தத்துவ ஞானியே !
சூழும் வினை வென்று கொடிய மரிப்புகளை வல்லமையால் தூக்கி வீசி
சாகாவரம் பெற்ற ஞானி போல் தொண்ணித்திரண்டில் கதை முடித்தாய்
ஆளுமை நிறையப்பெற்ற பரமஹம்ஷ சுவாமிகளை
அவர் சீடர் விவேகானந்தரை என்றும் மறக்காத ஐயாவே !
பாழாய் போன உலகின் சிறுமையை ஒதுக்கிவிட்டு
புண்ணியரே ! புகழ் உடம்போடு மறு உலகம் சென்றீரோ? என்றும்
உங்கள் நாமம் வாழும் !

*ஆரையம்பதி*
**ஆ. தங்கராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு வழி காட்ட எவரும் இருக்கவில்லை
தானே தன் வழிகாட்டியானார்
ஏகலைவன் பாணியில்
தன்னை வளர்த்துக் கொண்ட
**அமரர். தம்பிராசா** ஒரு கர்மயோகி
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தார்
தன்சுய முயற்சியால் ஆளுமையை வளர்த்தார்
பாலபண்டிதம் நொத்தாரிசு
பரீட்சைகளில் சித்தியெய்தினார்
சமயத்தீட்சை பெற்று புனிதரானார்
ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டிய வழியில்
ஆத்ம ஞானம் பெற்றார்
தியானமும் யோகமும் பயின்றார்
வெளியுலகிற்கு அவர் ஒரு
நொத்தாரிசு, சோதிடர் ஆனால்
உள்ளுக்குள் அவர் ஒரு ஆத்மீகவாதி
தொன்னூறு வயது வரை
நோய்நொடி இல்லாமல் வாழ்ந்தார்
கடமையைச் செய் பலனை எதிர்பாராதே
என்ற கீதை வாசகத்திற்கு இலக்கணமாகி
எல்லோரையும் அரவணைத்துச் சென்றார்
பேரும், புகழும் அவரைப் பாதிக்கவில்லை
இன்பமும், துன்பமும் அவரை அசைக்கவில்லை
இறுதி மூச்சுவரை இறைவன் நாமமே
அவருக்கு துணை நின்றது
வந்த வேலை முடிந்ததும்
வானுலகம் சென்றார்.

**எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைப் பற்றுடன் செயற்பட்ட உத்தம மனிதன்

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. எனினும் அவர்களின் பிறப்பும் இறப்பும் மகத்தானது. இது அவரவர் வாழ்க்கையின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. 18.08.2006 இல் சிவபதமடைந்த பிரசித்த நொத்தாரிஸ் சீனித்தம்பி தம்பிராசா ஐயா அவர்கள் தாம் மேற்கொண்ட வாழ்க்கைநெறி மூலம் மனித பிறப்பும் இறப்பும் மகத்தானது என நிரூபித்துச் சென்றுள்ளார். அவர் பிரம்மச்சாரி வாழ்க்கையை கடைப்பிடித்து வாழ்ந்தார் எனினும் தமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரையும் அணைத்து வாழ்ந்தார்.

நான் தொழில் ரீதியாக அவரது ஓர் மேலதிகாரியாக இருந்தேன் என்பதால் அவரது கடமை பற்றிக் குறிப்பிட வேண்டும். 1970 ஆம் ஆண்டிலிருந்து நான் அவரை கடமையின் மூலம் அறிந்திருந்தேன். நொத்தாரிஸ் தொழிலில் அவருக்கிருந்த நேர்மை, ஒழுக்கம், தொழிலில் அவருக்கிருந்த பற்று பயம் போன்ற நற்பண்புகளால் அவரது நண்பனானேன். அமரர். தம்பிராசா அவர்கள் சோதிடத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். எனது பிள்ளைகள் யாவருக்கும் சாதகக் கணிப்பு, திருமணக் கணிப்பு, வீடு அமைத்தல் போன்ற சகல காரியங்களும் அவரது சோதிடக் கணிப்புக்களே ஆகும்.

அமரர் தம்பிராசா ஐயா அவர்கள் 1958ம் ஆண்டு வைகாசி மாதம் 19ம் திகதி இம்மாவட்டத்திற்கு பிரசித்த நொத்தாரிசாக நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இறக்கும் வரை 25470 உறுதிகளை அத்தாட்சிப் படுத்தி நிறைவேற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் காலந் தவறாது உரிய நேரத்திற்கு பதிவகத்திற்கு தரப்பட வேண்டிய இணைப் பிரதிகள் மாத அட்டவணை, வார அட்டவணை என்பவற்றை ஒப்படைத்தவர் என்ற பெருமைக்குரியவர். தமது இறுதிக் காலங்களில் காணிப் பதிவகம் வந்து கடமைகளை செய்ய முடியாத உடல் நலக் குறைவுடன் இருந்த போதும் வாடிக்கையாளர் அவர் மீது வைத்திருந்த நன்மதிப்பு காரணமாக வீட்டிலிருந்தவாறே தனது தொழிலை செய்து வந்தார். அது ஒன்றே அவரது தொழில் திறமைக்கும் நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும் எடுத்துக் காட்டாகும். அவரது சேவைக் காலத்தில் திணைக்களத்தினாலோ அல்லது நீதிமன்றத்தினாலோ எது வித தண்டனைகளோ, எச்சரிக்கைகளோ இல்லாமல் கடமை புரிந்தமை அவருக்கு கடமையின் பால் உள்ள நேர்மையை உணரக்கூடியதாக இருக்கின்றது. சுருங்கக் கூறின் அமரர். தம்பிராசா அவர்கள் வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார். தொழிலில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார். சமய நெறியில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார். "**ஒழுக்கத்தை நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு**" என்றார் வள்ளுவர் அமரர். தம்பிராசா ஐயா அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கத்தை நாமும் கைக்கொள்ள முயல்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**வே. கனகராசா**
ஒய்வுபெற்ற உதவிப் பதிவாளர் நாயகம்
வட கிழக்கு வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## ஞாயிறு

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய் போற்றி

## திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும் திங்களே போற்றி
திருவருள் தருவாய் சந்திரா போற்றி
சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறையிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலியானே
உதவியே யருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குரு

குணமிகு வியாழக் குருபகவானே
மணமுடன் வாழ மகிழ்வுடனருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
க்ரக தோஷமின்றித் கடாஷத்தருள்வாய்

### வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளித் தருவாய் அடியார்க் கருளே

### சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றித் சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

### ராகு

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்யா போற்றி

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றிப் பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கழுகுமலைப் பத்து



கழுகுமலை தனிலுறையும் முருகவேளே
கருத்துடனேவுன் பாதமலர் தானேவோத
பழுதொன்றும் வராமல் கார்க்கவேணும்
பச்சைமால்தன் மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியன் முன் நிற்க வேணும்
வரும் பிழைகள் தனையகற்றிவிளியச் செய்வாய்த்
தெளிவாகவுன் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 1

காடுதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவேகத்தால் சாடிடவே
மனதிலெண்ணிப் பரிசைகத்தி தானெடுத்தார்
தவிடுபொடியாக்கவென்று
கூடியவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமாரவேலன்றெண்ணிக் குலைத்திட்டார்கள்
தேடியவுன் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 2

கிட்டாதபொருள்தனைப் போலென்னாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில்யானும்
எட்டியெட்டியேவுன்னை பார்க்கும்போது
ஏமாற்றி என்னை விட்டுகயேகலாமோ
சட்டமுடன் தோகைமயில் மீதேறிச்
சடாச்சரமாய் என் முன்னே தோற்றவேணும்
திட்டமுடனுன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தியுடனேயிந்தப் புவியில்தானும்
கிருபையுடனுன்னையே தேடிவாறேன்
பூர்த்தடலர் போலவுன்னை காண்பதெப்போ
புண்ணியனே எனக்கு வரம் தருவதெப்போ
வார்த்தையொன்று முறையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மனதன்பாகத்
தீர்த்தங்களாடியுன்னைத் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 4

குவலயத்தின் அடியேன் யான் செய்த பாவம்
குற்றமெல்லாம் பொறுத்துனது குழந்தைபோல
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணைதந்து
காப்பதுவுன் செயல்லல்வோ கார்த்திகேசா
சவளையிளங் கன்றதுதன் தாயைத்தேடி
தயங்குகிறதுபோலயான் தயங்கலானேன்
சிவலைநிற மார்பழகா செந்தூர்க்கந்தா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 5

கூடியமறலியென்னைப் பிடியாவண்ணம்
கொடுநரகிலேயானும் வீழ்ந்திடாமல்
மனம்மெலிந்து போகாவண்ணம்
மாகவேவுன்னுடைய கீர்த்திதந்து
பாடியேபதனொளி பவாயம் மென்றால்
பறக்குமே பசாசு முதல் ஏவல், தானும்
தேடியேவுன்பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளிதினப் புனத்திலேதான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
தடியூன்றித் தண்டு கமண்டலமும் கொண்டு
சாட்டாங்க மாய்க் குறவர்க்கெதிரே சென்றாய்
தேடியேவுன் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே. 7

கேசவனார் மருகோனே நீ செய்கோலம்
கெடிதான குமரகுருவேடனாகி
நேசமுடன் கையிலம் புங்கொண்டு நிமீசமுடன்
வள்ளிதெனப் புனத்திலேதான்
பாசமுடன் பெண்ணே கண்ணேயென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாந் திரிந்தலைந்தேன் உன் பாதங்காண
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே. 8

கையிலேக் கோழிக் கொடியும் வேலும்
வள்ளி தெய்வானையுடன் மயில் மீதேறி
தையநல்லாள் தீபதூபம் பிடிக்கத்
தாதியர்களிருபுறமுங்க வரிவீச
மெய்யுடனே ஆறுருபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள் தாரும்
தெய்தெய் என்றுன்பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே. 9

கொன்றை மலர் வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்தகுமாரவேலே
அண்டரெல்லா முனைக்கான வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணிக்கி நிற்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டைக்கிங்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடிவந்துன் ஒளியைக் காட்டுந்
தென்டேனிட்டேனுன் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 10

கோதையர் களிருபுரமுங் கவரிவீசக்
குளிரான மதிமுகங்களாறுந் துண்ணக்
காதலுடன் பன்னிருகை வேலுந்துண்ணக்
கானமயில் மீதேறுங் காத்திகேயர்
வாதுடனே சோதையன் செய் சிகரந்தன்னை
வடிவேலால் நீறுசெய்த வானோர்க்கோவே
சீதமருகோனே உன் புகழைச் சொன்னேன்.
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 11

கவ்வியபூதமெனைப் பிடியாவண்ணம்
காந்துனது கிருபைதந்து ரட்சியுமையா
வவ்வியமை மறந்து மொறுபாசாசுதா
பவனொளி பவயமென்றால் பறக்குமேதான்
ஒவ்விய எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம் நமசிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையாயுள் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 12

இக்கணமே இது நல்லவேளையையா
இதோ பாரும் சந்நிதியில் திருவிழாவை
வணங்கமாய் கற்பூர மானவிளக்கு
வகைவகையாய்க் கன்னியர்க் ளேந்துறார்க
ளெக்காலம் பேதரிகை தம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
இக்கணமேவுன் பாதந் துதிப்பேனையா
சுவாமி தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண் (டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒண்ணித் திலநகையாய் இன்னம்புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

5. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந்தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

7. அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந்தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரனாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மனவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

12. ஆர்த்தபிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ்வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து(உ)டையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலித்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென் (று)
அங்(கு) அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு) இப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங் கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம்

***அமரர்***

***சீனித்தம்பி தம்பிராசா***

அவர்களின்

மறைவை ஒட்டி சகல வழிகளிலும்

எங்களுக்கு உதவி செய்த அனைவருக்கும்

எங்கள்

இதயம் நிறைந்த

**நன்றி**

**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்.**



நொத்தாரிஸ் வீதி,
ஆரையம்பதி
18.09.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org